427

8 APR 1926
MADRAS

# கைங்கரிய முறை.

# THE WAY OF SERVICE.

BY

G. S. ARUNDALE, M.A., L.L.B.

அன்பர்பணி செய்யவேனை
ளாக்கி ட்டுவிட்டா
லை னேவந்
ராபரமே.
(ாயுமானவர்.)

QM
N26

# கைங்கரிய முறை

# THE WAY OF SERVICE.

BY

**G. S. ARUNDALE.** M.A., L.L.B.

அன்பர்பணி செய்யவென்னை
யாளாக்கிவிட்டுவிட்டா
லின்பநிலை தானேவந்
தெய்தும் பராபரமே.
(தாயுமானவர்.)

தமிழ் மொழி பெயர்ப்பு.

R. ஸ்வாமிநாதய்யர். F.T.S.

முதற்பதிப்பு. 1000.

1926.

விலை அணா 1 1/2

OF BOOKS
23 APR 1926
MADRAS

இஃது

கைங்கரிய உத்ஸாகப்

குன்றாது பிரகாசிக்கின்ற

ஆல்கியானி எனும் குறிப்புப் பெயர் தரித்த

ஸ்ரீமான்

ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு

அர்ப்பணம் செய்யப்பட்டது.

# முன்னுரை.

இச்சிறு புஸ்தகத்தில், கைங்கரியம் புரியும் முறையைப்பற்றி, நான் என் பெரியோர்களிடமிருந்தும் என் சொந்த அனுபவத்திலிருந்தும் சேகரித்த சில குறிப்புகள் அடங்கியுள்ளன. இவைகளைப் பின்பற்றி நடக்க நான் இன்னமும் முயன்றுவருகிறேன்; சில வேளையில் ஜயத்துடனும், பலதரம் அபஜயத்துடனும் அனுஷ்டித்து வருகிறேன். ஆயினும் இவ்விஷயங்களெல்லாம் உண்மையானவைகளென்று உணர்கிறேன். ஆகையால், என்னைப்போல் கைங்கரியம் செய்யப் பழகிக்கொண்டிருக்கும் மற்றவர்களுடன், இவைகளைப் பகிர்ந்துகொள்ள அனுமதி பெறுதற்கு நான் நன்றியுள்ளவனாகிறேன்.

ஜி. எஸ். அருண்டேல்.

# கைங்கரிய முறை.

1. நீ பிறர்க்குத் தொண்டு புரிவதில் அவர்கட்கு அநுகூலமாயும் உனக்குக் கெடுதியின்றியும் செய்ய விரும்பினால், அடியிற்கண்ட மூன்று உண்மைகளை கவனித்து அதன்படி நடக்கவேண்டும்.

(1) பணி செய் முறையைப் பிடித்துக் கொண்டு ஒழுகுதலையே உனக்குக் கிடைக்கத் தகுந்த பரமானந்தமென்று நீ தெரிந்துகொள்ளவேண்டும்.

(2) தொண்டு புரியும் சக்தி உனக்கு உன்னிலும் பெரியாரிடமிருந்து வருகிறதென்றும், நீ அப்பெரியாரின் ஸேவகனே யென்று தெரிந்துகொண்டிருக்கிறாயா வென்பதையும் சோதித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(3) உன்னிடமுள்ள தெய்வத் தன்மையே மற்றவர்களிடமும் இருக்கிறதென்று நீ உணர வேண்டும்.

2. பிறரைப்பற்றி நீ பேசக் கூடியதும், நினைக்கக் கூடியதும் எல்லாம் பிறரால் ஏற்கெனவே உன்னைப்பற்றிப் பேசப்பட்டும் நினைக்கப் பட்டும் இருக்கின்றனவென்று நீ நினைப்பில் வைக்கவேண்டும்.

3. நீ பிறரால் துன்பமடையும் பொழுது துன்பம் செய்கிறவன் துன்பம் அனுபவிக்கிறவனைவிட அதிகமாய் வருந்துவானென நினை.

4. நீ ஒருவனிடம் வைக்கும் பிரியமானது, உன்னுடைய மன நேர்மையையாவது, அவனுடைய மன நேர்மையையாவது பாதிக்கும்படி விடாதே. உன் கைங்கரியமானது

இருவர் மனச் சாந்தியையும் பலப்படுத்த வேண்டுமேயொழிய பலவீனப்படுத்தல் கூடாது.

5. வேலை புரியும் சக்தி, உன்னிலுமதிகமாக வேறொருவரிடம் இருக்கக் காணின் நீ பொறாமைப்படாதே. உன் குறைந்த சக்தியால் பிறர்க்கு வேண்டிய அளவு சேவை புரிய முடியாதிருக்கும் குறையை நீக்கும்படி, அதிகமான சக்தியுள்ள பிறர் கிடைக்கப் பெற்றாரென்று நீ சந்தோஷப்படுதல் வேண்டும்.

6. நீ ஒருவரை நோக்கிக் கொடுத்த கொடை அவரிடமே இருத்தல்வேண்டுமென்று எதிர்பாராதே. அவருக்குச் சந்தோஷத்தை யளித்த அவ்வெகுமதி இன்னொருவரையும் அவ்விதம் செய்வதைக் கண்டு நீ மகிழ்ச்சியடை.

7. நீ பிறர்க்குதவி செய்து கொண்டிருக்குந் தருணத்தில் அந்த நிமிஷத்திற்கு மட்டு

மாவது, பிறர்க்குத் தொண்டு புரியும் சக்தியை உனக்கு அளித்த பெரியோர் (குருநாதன்) ஆகவே நீ யிருப்பதாய் பாவனை செய்துகொள். அப்படிச்செய்வதால் நீயும் அந்தப்பெரியோரை அடைதல்கூடுவதோடும் பிறர்க்கும் அதிகமாய் உதவிபுரியும் சக்தியையும் பெறுதலாகும்.

8. நீ செய்யும் கைங்கரியத்தின் பலனை எதிர்பாராதே. நீ உதவி செய்கிறவரிட மிருந்து நன்றியறிதலுள்ள வார்த்தைகள் வராமலிருக்கும்பொழுது அதற்காக வருந்தாதே. நீ தொண்டு புரிவது அவர் ஆன்மாவுக்கே யன்றி அவர் சரீரத்திற்கன்று. உதடுகள் மௌனம் சாதிக்கினும் ஆன்மாவின் செய்நன்றியை நீ எப்பொழுதும் பார்க்கலாம்.

9. நீ யாரிடம் அன்புபாராட்டுகின்றாயோ அவர்களும் உன்மேல் அன்பு பாராட்டவேண்டு

மென்று நினையாதே. நீ அவர்களை நேசிப்பது உண்மையாயிருந்தால், சமீபத்திலோ அல்லது சிறிது காலஞ்சென்றோ உன் அன்பானது அவர்கள் ஹிருதயங்களிற்புகுந்து அவர்களையும் உன்னிடம் அன்புள்ளவர்களாகச் செய்யும். அது நிலையற்றதாயிருந்தால், உன் அன்பு நின்றுவிட்டதென்று அறிந்து என்றைக்காயினும் ஓர் நாள் அவர்கள் துக்கப் படுவதினின்று தப்புவது மேல்.

10. தன்னையே அடக்கியாள முடியாதவன் உண்மையில் பிறர்க்குக்கைங்கரியம்புரிய இயலாதவனென அறி.

11. யாவற்றினும் மேன்மையுள்ள கைங்கரியமென்பது, பிறர் சுமையைச் சுலபப்படுத்துவதேயன்றி, அப்பாரத்தை நாமே வாங்கித் தாங்குவது அன்று.

12. பிறர் மேன்மையெனக் கருதும் அபிப்ராயத்தை நீ ஏற்றுக்கொண்டு அதற்கு இசைந்து நீ அவர்கட்குக் கைங்கரியம் செய்தால், அப்பொழுது தான் நீ அவர்களுக்கு மேலான கைங்கரியத்தைச் செய்ததாகும்.

13. ஒவ்வொரு மனிதனுடைய உயர்ந்த கைங்கரிய முறையானது, அவனவன் எதெதில் மேம்பாடடைந்திருக்கின்றனே, அததன் மூலமாய் நன்கு நடைபெறும். உலகில் உதவி பெறுகின்றவர்கள் எத்தனைபேர் உளரோ, அத்தனை விதங்களான கைங்கரிய முறைகளும் இருக்கின்றன.

14. தொண்டு புரிவதற்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிஷமும் ஏற்ற காலம்; ஏனெனில், உபகாரச் செயலுக்கு எப்பொழுதும் சமயம் கிடைக்காவிடினும், உபகாரச் சிந்தைக்கு எப்பொழுதும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

15. பிறர் நலத்திலேயே அதிக நாட்டமுற்று, தன்னைப்பற்றிய ஞாபகம் ஒருவனிடம் எவ்வளவு குறைந்திருக்கின்றதோ, அவ்வளவு அதிகமாக அவன் உண்மையில் தன் சொந்த அபிவிர்த்தியில் கவனம் செலுத்தியவனாவான். ஒவ்வொரு சிறு கைங்கரியச் செயலும் அதைச் செய்வோனுக்குக் கைங்கரியம் புரியும் சக்தியை அதிகரிக்கச் செய்யும்.

16. ஒருவனுக்கு நீ தொண்டுபுரியும் வழிமுறை பிடிக்காவிட்டால், வேறு அவனுக்குப் பிடித்தமான விதத்தை நாடு. அவனுக்குத் தொண்டு புரியவேண்டுமென்பது உன் விருப்பமேயொழிய, அத்தொண்டு நீ நினைக்கும் விதமாகத்தான் செய்யவேண்டுமென்பதன்று.

17. ஒருவனை உனக்குத் தெரிந்தாலும் தெரியாவிடினும் அவனுக்குத் தேவையாயிருக்

கிற சமயத்தில் உதவியளிக்க ஸங்கோஜப் படாதே. அவனுடைய தேவையே அவனை உன் ஸஹோதரனாகச்செய்கின்றது. உன் ஸங்கோஜமானது ஓர்வித அகங்காரமாகும். அது அவனது கஷ்டகாலத்தில் அவன் ஓர் உபகாரியை இழந்துவிடச் செய்கிறது.

18 "இன்று பிறர்க்கு அதிக உதவி செய்திருக்கின்றேன்" என்று நினையாதே. ஆனால், இன்னுமதிகமாகச் செய்திருக்கலாகாதாவென்றும், இவ்வுலகில் துக்கமும் துன்பமும் எவ்வளவோ யிருக்க அதைக் குறைக்க நீ செய்தது எவ்வளவு அற்பமென்றும் நினைக்க வேண்டும்.

19 கீழ்யுள்ளவர்களை மிகத் திறமையாய் நடத்தத் தகுந்த தலைவர்கள் யாரெனின், தங்களுக்கு மேலேயுள்ள தலைவர்களை வெகு நேர்

மையாய்ப் பின்பற்றி நடப்பவரேயாவர் ; ஏனெனில், யார் கீழ்ப்படியத் தெரிந்துகொள்ள வில்லையோ அவர் ஒழுங்காய்க் கட்டளையிடவும் முடியாதவர்.

20. நீ சொல்லும் நற்புத்தியைக் கேட்கும்படி ஒருவனைத் தூண்டுவதற்குச் சரியான முறை, அதை முதலில் நீயே அனுசரித்து நடத்தலாம்.

21. உன் நல்லெண்ணங்கள் கௌரவிக்கப்படவேண்டுமென்று நீ விரும்புவது போல் மற்றவர்களுடைய நல்லெண்ணங்களையும் மதி.

22. பிறர் தூஷிக்கும் படியான கீழ்நிலைக்கு ஒருவன் வந்தாலொழிய, அவனை ஒருவரும் தூஷணை புரிவதில்லை ; ஏனெனில், நிந்தனையென்பது கீழான சுபாவத்தால் ஏற்படுவது, அது மேலான சுபாவத்தைப்பாதியாது.

23. நீ கைங்கரியம் செய்துகொண்டிருக்கிறுயென்றும் மற்றவர்கள் அப்படிச் செய்வதாய்த் தோன்றவில்லையென்றும் எண்ணி நீ அவர்களைவிட மேலானவனென்றுநினைத்தால், அந்நிமிஷமே நீ கைங்கரியம் செய்யாதவனுகிருய்.

24. உண்மையானஸேவையென்பது, மற்றொருவருடன் ஒருமித்து உன்னைப்போல் அவரையும்எண்ணிச்செய்தலாகும். அப்படிக்கின்றி, நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ, நீ உயர்ந்தவனென்று அவரிடம் காட்டிக் கொண்டு செய்வதன்று.

25. நீ கைங்கரியத்தைப் பற்றி முதலில் பேசி பிறகு அதைச் செய்வதைவிட, அதை முன்னர் செய்துவிட்டு பின்னர் பேசுவதுமேல். ஆனால் எப்பொழுதும் கைங்கரியம் செய்துவிட்டுப்பின்னர் ஒன்றும் பேசாதிருப்பதே அதனினும் மேலானது.

26. நன்ருய்க் கைங்கரியம்புரிவதில் ஒருவனுடைய திறமையை, அவனுடைய சாதாரண குடும்பவாழ்க்கையை அவன் நடத்தும் முறையால் மாத்திரம் அறியத்தகும். அவன் எழுதியிருக்கும் கிரந்தங்களாலாவது, அவன் அடைந்திருக்கும் கீர்த்தியினுலாவது, அல்லது அவன் பலரறியச்செய்யும் பிரசங்கங்கள், பிரபலமானசெய்கைகள் இவைகளாலாவது அன்று. ஒருவனை உயர்த்தோணுக்குவது, அவன் செய்யும் பெரும் பகிரங்கமானகாரியங்களன்று. ஆனுல் அவன் பிரதிதினமும் சுயநலமின்றிப் பிறரறியாமல் செய்யும் சிறு சிறு செயல்களே அவனை உண்மையில் உயர்த்துவதாகும்.

27. பூரணமாய்க் கைங்கரியம் புரிய விரும்புவோன், கைங்கரியம் புரிதலென்ற விசேஷமான உரிமைக்காகத் தனக்குள்ள ஸகலவுடைமைகளையும் அர்ப்பணம் செய்யச் சித்தமாயிருக்கவேண்டும்.

28. ஒருவன் பலவழிகளில் உன் கைங்கரியத்தை விரும்பலாம். ஆனால் நீ செய்கிற விதம் அவனுக்குப்பிடிக்காவிட்டாலும், அவன் விரும்புவதையெல்லாம் செய்யாமல் அவனுக்கு எது தேவையானதோ அதையறிந்து செய்தல் நலம். ஆயினும் அது அவனுக்கு பிரயோஜனமான விதமாகும்படி நீ செய்யவேண்டும்.

29. ஒருவனுக்கு உண்மையில் செய்ய வேண்டிய உதவியை மற்றொருவனுக்குச் செய்வது உண்மையான கைங்கரியமாகாது. சரியான வழியைவிட்டு வேறெந்த வழியிலாவது அநேகர் தொண்டுபுரிய விரும்புகின்றனர். அவர்கள் யாருக்குத்தொண்டுபுரியக் கடமைப்பட்டிருக்கிறார்களோ அவர்களை அலக்ஷியம் செய்துவிட்டு, அவர்கள் யாருக்குச்செய்ய விரும்புகிறார்களோ அவர்களுக்குச்செய்கிறார்கள்.

30. ஒரு தினத்தில் எவ்வளவுக் கெவ்வ

ளவு நற்செய்கை செய்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு பயனடைகிற ஸாதிமையாகும்.

31. உலகத்தில் ஏதேனும் தேவையில்லாதவர் ஒருவருமில்லை; பிறர்க்கு ஏதேனும் கொடுக்கமுடியாதவருமிரார்.

32. நீ எவனுக்கேனும் தொண்டுபுரியப் பிரயத்தனப்படும்பொழுது அவனது பலவீனங்களைக்கண்டு பொறுமையிழந்தவனாகாதே. அவனுடைய குறைவுகள்தான் நீ அவனுக்குத் தொண்டு புரியும்படியான விசேஷ உரிமையை உனக்களித்தது. ஏனெனில், அவன் குறைவிலனாயின், அவனுக்கு உதவியும் வேண்டியதில்லை.

33. பின்னால் இன்பம் பயக்குமென்ற நிச்சயமில்லாத யாதொரு துன்பமுமில்லை; அப்படியே பின்னொரு நாளில் ஓர் மேன்மைக்

குணமாய்ப் பரிணமிக்காத குறைவு அல்லது தோஷமுமில்லை.

34. நீ எவருக்கேனும் உதவி செய்து கொண்டிருக்கும் பொழுது, அவரது தோஷத்திலுள்ள சக்தியானது, உன் உதவியால் இனி அவருக்கு நல்ல குணமாய் மாறும் சக்தியாய் ஆகுமென்பதை நீ மறந்துவிடாதே. நீ அதிலுள்ள சக்தியை மாற்றக்கூடாது; ஆனால் அதன் உருவத்தையும், போக்கையும் மாற்ற முயல வேண்டும்.

35. பிறர்க்குதவிபுரிய உனக்கு இப்பொழுதேற்பட்டுள்ள ஆதாரங்களைவிட அதிகமாயிருந்தால், எவ்வளவு அதிக நன்றாய்த் தொண்டு புரியலாமென்று நீ மனதினால்நினைப்பதைவிட, உன் தற்போதுள்ள சௌகரியங்களைக்கொண்டு நீ காரியத்தில் காட்டக்கூடிய சிறு உதவியானது அதிக விலை மதிப்புள்ளதாகும்.

QM N26

36. ஒருவன் ஸத்குண ஸம்பத்தையடையுமாறு அவனுக்கு நீ அதிகமேலான விதமாய்ச் செய்யும் உதவியானது, அவனிடத்தில் குறைவாயிருக்கிற நற்குணங்களை உன்னுடைய சொந்த சீலத்திலேயே நீ காட்டுவதாகும்.

37. நீ பிரதிதினமும் மற்றவர்களுக்குச் செய்யும் கைங்கரியத்தின் மஹிமையைச் சோதித்தறியும் வழியானது, நீ நாளுக்குநாள் அதிக சாந்தமுள்ளவனாயும், அதிக திருப்தியுள்ளவனாயும், சந்தோஷமுள்ளவனாயும், பிறர் அபிப்பிராயங்களில் அதிகமாய் இடங்கொடுத்து நடப்பவனாயும் ஆகின்றாயாவென்று கவனித்துப் பார்ப்பதுதான்.

38. உலகம் உன்னிடமிருந்து விரும்புவது, உன்னால் முடிந்த வரையில் செய்யக்கூடிய கைங்கரியத்தையே யொழிய, வேறொருவரால் முடியக்கூடியவையன்று. உன்னால் செய்

யக்கூடியதையெல்லாம் நீ செய்துவிட்டால் நீ செய்யவேண்டியதை யெல்லாம் செய்துவிட்டவனுவாய்.

39. நீ கைங்கரியம் செய்வதை ஒருவன் வேண்டாமென்று மறுத்தானுனல், இனி அவனுக்கு எந்த உதவியும் செய்யாமலிருப்பதற்கு அதை ஓர் சாக்காக உபயோகித்துக்கொள்ளாதே. கைங்கரியத்தை மறுக்கிற ஒருவன் அதை இன்னுமதிகமாகவேண்டியப்படிச் செய்கிருன்.

40. பிறர் உனக்கு தாராளமாய் விரும்பிச்செய்யும் கைங்கரியத்தை நீ வேண்டாமென்று சொல்லும் பொழுதும் நீ ஏன் அப்படிச் செய்கிருயென்று நிதானி. ஏனெனில் பிறர்க்குச்செய்வது கைங்கரியமாவதுபோல், பிறர் உனக்குச்செய்வதை ஏற்றுக்கொள்வதிலும் நீ செய்யும் கைங்கரியம் இருக்கின்றது.

41. உன்னால் முடிந்தவரையில் நேர்மையாயும், முழுமனத்துடனும் ஒருமுறை நீ கைங்கரியம் செய்துவிட்ட பிறகு அதன் பலனைப் பற்றிக் கவலையடையாதே. உன் கைங்கரியத்தின் பரிசுத்தமானது அதைச்செய்கிறவனுக்கு ஆசீர்வாதத்தையளித்து, அந்தக் கைங்கரியத்தைப் பெற்றுக்கொள்பவனையும் ஆசீர்வாதம் சூழ்ந்துகொள்கிறது.

42. கைங்கரியம் செய்வதால் கிடைக்கக்கூடிய உயர்ந்தவெகுமதி, அன்பு செலுத்தவும் கைங்கரியம் செய்யவும் அதிகமதிகமான சக்தியைப் பெறுவதேயாகும்.

43. உண்மையான சந்தோஷம் இல்லாதவன் உண்மையான ஸேவை செய்ய முடியாதவனாகிறான்.

44. அன்புடன் செய்யப்பட்ட கைங்கரியமானது, அறிவீனமாய்ச் செய்யப்பட்டுவிட்டதாகத்தெரிந்தாலும் கடைசியில் நீ உதவிசெய்ய

விரும்பிய மனிதனுக்கு அது யாதொரு தீங்கையுமுண்டாக்காது. அன்பின் சக்தியானது அறிவீனத்தால் ஏற்படும் தீங்கினின்றும் அவனைக் காக்கும்.

**45.** ஒருவனை உண்மையில் மன்னிப்பதென்பது, எந்தக் குற்றத்திற்காக மன்னிப்புக் கேட்கப்பட்டதோ அக்குற்றத்தை இனிமேல் அவன் செய்யாவண்ணம் தடுத்துக்கொள்ள அவனுக்கு அன்புடனும், சிரத்தையுடனும் உதவி புரிவதேயாம்.

**46,** மற்றவர்களைப்பற்றித் தீர்மானிப்பது அடிக்கடி நமது கடமையாகாது, எப்பொழுதாவது சிலசமயம் அவ்விதம்நேரும்; ஆனால் அவர்களுக்கு உதவி புரிவதோ எப்பொழுதும் நம் கடமையாகும்.

**47.** உனது ஆன்ம அபிவிர்த்தியை நீ சோதிக்க விரும்பினால், பிறர்க்குத் தொண்டு

புரிய உனக்கு வாய்க்கும் சமயங்களை நீ அலக்ஷி யம் செய்வதை முன்னைவிட இப்பொழுது வர வரக்குறைத்திருக்கின்றாயா வென்று கவனித் துப்பார்.

**48.** இன்னொருவன் கைங்கரியம் செய் யும் விதத்தைப்பற்றி நீ புகார்செய்யும்பொழுது, நீ செய்யும் மாதிரி பிடிக்காதவர்களுக்கு அவன் உதவிசெய்து கொண்டிருக்கிறானென்று நீ ஒருக்கால் மறந்துவிடுகிறாய்.

**49.** வேலைவை புரிவதற்கு நீ எங்கிருந்து சக்தியையும் உற்சாகத்தையும் அடைந்தாயோ, அந்த மூலகாரணத்தை வெளியிட அஞ்சாதே; ஏனென்னில், நீ இன்பமடைந்தவழியை பிறராறி யச் சொல்வதானது, உலகத்திற்களிக்கக்கூடிய மகா அழகான விஷயங்களிலொன்றாகும்.

**50.** நீ ஒருவர்க்கு அன்புடன் செய்யும் ஒவ்வொரு கைங்கரியமும், அவரை தைரியப்ப

டுத்தி ரக்ஷித்துக்கொண்டு அவரது பக்கத்திலி ருப்பதற்கு, உன்னால் சிருஷ்டிக்கப்பட்ட ஓர் காவல் புரியும் தேவதூதனுயிருக்கிறது. உன் கைங்கரியத்தில் எவ்வளவு அதிகமாக அன்பைப் புகவிடுகிருயோ, அவ்வளவு அதிகமான பிரா ணனை அந்த தேவதூதனுக்களிக்கின்ருய்; அத ஞல் அவன் தைரியப்படுத்தி ரக்ஷிப்பதற்காக அதிககாலம் உயிர்பெற்று விளங்குகிருன்.

**51.** யாருடைய கைங்கரியச் செயல்கள் ஸ்தூலக் கண்களால் பார்க்கப்படுகின்றனவோ, அவர்கள்தான் கைங்கரியம் செய்கிறவர்களெ ன்று நீ நினையாதே. மகா மேன்மையான கைங் கரியங்களிற் சில ஒருவராலும் பார்க்கமுடியாத வைகளாயிருக்கின்றன.

**52.** நீ இன்றுசெய்யவேண்டிய ஓர் கைங் கரியத்தை நாளைக்குச்செய்யலாமென்று தள்ளி வைத்தால், உனக்குத் தொண்டுபுரியவாய்த்த ஒரு தருணத்தை நீ இழந்துவிட நேரும்; ஏனெ

னில், அந்தக்குறிப்பிட்ட காரியம் நாளைத்தினம் வேண்டப்படாததாயும், இன்று செய்யாமல் விடப்பட்டதாயும் ஆகலாம்.

**53.** உன்னைக் கண்டுகொள்ள வருகின்ற ஒவ்வொருவரையும் கவனித்து அவர் சொல்வதை சாவதானமாய்க் கேட்பது, நம்மால் மிகவும் அலக்ஷியம் செய்யப்பட்டுவரும் கைங்கரியங்களில் ஒன்று. அவர் சொல்லவேண்டியதாயிருப்பதை நீ அக்கரையுடன் கவனித்துக்கேட்டால் அக்கைங்கரியபாகம் பாதி முடிந்துவிடும்.

**54.** நீ துன்பப்படும்பொழுது, கொஞ்சம் சிரமத்தோடாவது, மற்றவர்களுடைய துன்பங்களைக்கண்டு அனுதாபப்பட அதிக சக்தியைப்பெறுகிறாயென்று ஞாபகப்படுத்திக்கொள்; ஏனெனில், நீ ஒரு குறிப்பிட்ட துக்கத்தைக் கடந்து சென்றால், நீயே தாங்கியிருந்த துன்பத்தின் அளவாவது, இன்னொருவருக்கு லபிக்

கூம் அத்தகைய துன்பத்தை நீ அதிக நன்கு யறிந்துகொள்ளக் கூடும்.

55. கைங்கரியம்புரிய விரும்புகிறவர்கள் ஐக்கியத்தின் இரண்டு தோத்திரங்களுளதை அறிந்துகொள்ளவேண்டும்; ஒன்று துன்பம், மற்றது இன்பம். ஒன்று எல்லாரும் பகிர்ந்து கொள்ளவேண்டிய பொதுவானதோர் போராட்டத்தைப்பற்றி போதிக்கின்றது; மற்றொன்று, எல்லாரும் அடைவதற்காகக் கட்டுப்பட்டுள்ள ஓர் பொதுவான முடிவிடத்தைப்பற்றிக் கூறுகின்றது.

56. நீ செய்யும் கைங்கரியங்களைப்பற்றி உன் ஹிருதயத்தின் தீர்மானத்தைவிட உலகினரின் தீர்மானமானது மிகக் குறைவாய் மதிக்கத் தகுந்தது.

57. அநேக ஜனங்கள் எங்கேயாவது ஓரிடத்தில் கைங்கரியம் புரிய விருப்பமுள்ளவர்க

ளாயும் சக்தியுள்ளவர்களாயும் இருக்கிறார்கள். எந்த இடத்திலும் தொண்டுபுரிய பிரியமுள்ள வர்களாயும் சக்தியுள்ளவர்களாயும் எத்தனைபேர் இருக்கிறார்கள்?

58. செழிப்பில்லாத இடங்களில் அழகான புஷ்பங்கள் உண்டானல் எப்படியோ, அப்படியே மிகவும் தேவையான காலங்களிலும் இடங்களிலும் செய்யப்படும் கைங்கரியமானது மிகச் சிறந்ததாகின்றது.

59. ஒரு சிறு சுடரும் அதைச் சுற்றிலுமுள்ள இருட்டில் ஒளியுடன் பிரகாசிப்பது போல், ஓர் சிறு கைங்கரியமும் சுயநலம் சூழ்ந்துள்ள இடத்தில் தெளிவாய் தெரிகின்றது.

60. உன்னைச் சுற்றியுள்ள இடங்கள் எவ்வளவுக் கெவ்வளவு அவலக்ஷணமாயும் வெறுப்பாயும் இருக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு

உன் கைங்கரியங்களால் அவைகளை அழகுபடுத்தவேண்டிய அவசியமும் ஏற்படுகின்றது.

61. நீ இப்பொழுதுள்ள இடத்தில் கைங்கரியம்புரிய சந்தர்ப்பங்களைக் கண்டுபிடிக்க சக்தியற்றவனாயிருந்தால், அப்படிப்பட்ட சமயங்களைக் கண்டுபிடிக்கலாமென்று நீயே விரும்பும் வேறு இடத்திலும் உன்னால் முடியாது.

62. எவன் அநேக உபகாரங்களை பிறரிடமிருந்து பெற்றுக்கொண்டு திரும்ப ஒன்றும் செய்யாமலிருக்கின்றானோ அவன் இவ்வுலகில் மிகவும் தனிப்பட்டவனாயும் பரம துக்கியாயும் இருக்கிறான்.

63. சேவையானது ஸ்தூல வுலகில் செய்கையாகவும், காமலோகத்தில் அநுதாபமாகவும், மனோலோகத்தில் அறிவாகவும் விளங்குகின்றது.

 18/223

64. ஓர் தினம் நல்ல வெளிச்சமுள்ளதாயிருப்பதற்கு சூரியப்பிரகாசம் எப்படி அவசியமோ, அப்படியே உன்னுடைய நாள் சோபிதமாயிருப்பதற்கு உன்னுடைய கைங்கரியச் செய்கை அவசியமாகிறது.

65. இன்பக் களஞ்சியத்தை ஒவ்வொரு நாளும் அதிகாலையில் திறப்பதற்கு மிகச் சிறந்த திறவுகோல், வெகு சிரத்தையுடனும் அன்புடனும் செய்யும் யாதேனுமோர் சிறு கைங்கரியமாகும்.

66. ஸேவையானது, இரக்கம் என்னும் குணத்தைப்போல் இருதரம் வாழ்த்தப்படுகின்றது: அது கொடுப்பவனையும் பெற்றுக்கொள்பவனையும் வாழ்த்துகின்றது.

67. நமக்குள்ளே இருக்கும் ஆன்மாவின் அறிவானது, நமக்கு வெளியேயுள்ள ஆன்மா

வுக்குத் தொண்டுபுரிவதன் மூலமாய் அடையப் படுகின்றது.

68. பிறர் தூண்டுதலின்றி நாமாகவே செய்யும் கைங்கரியங்களே மிக உண்மையான கைங்கரியங்களாகும்.

69. உன்னைச் சூழ்ந்துள்ளவர்களுக்கு நீ செலுத்தும் கடமையைப் பொருத்து நிகழும் ஓர் குணத்தோற்றமே ஸேவையென்பதாகும். உதாரணமாக, உன்னிலும் ஞானத்தில் மேம் பட்டவர்களிடம் நீகாட்டும் அன்பின் உண்மைத் தோற்றமே மரியாதை அல்லது வணக்கம் எனப்படும்; உன்னிலும் கீழோரிடம் செலுத் தும் அன்பே காப்பாற்றுதல் என்பதாகும்.

70. சிலர் தங்களைச் சூழ்ந்துள்ளவர்கள் புகழ்ந்து சந்தோஷப்பட்டால் தான் கைங்கரி

யம் செய்வார்கள். வேறு சிலர், தங்களைச்சூழ்ந்துள்ளவர்களுக்குத் தேவைகாரணமாகவே கைங்கரியத்தைச் செய்வார்கள்.

71. சௌகரியமான நிலைமைகளில் ஏற்படும் சிநேகிதர்கள்போல், சௌகரியமான நிலைமைகளிற் கிடைக்கும் தொண்டர்களும் உண்டு. கைங்கரியம் புரியவேண்டுமென்ற உன்னுடைய விருப்பமானது, எவ்வளவுதூரம் சுயநலமற்றதென்று தீர அறிந்துகொள்ள நீ உன் ஹிருதயத்தைச் சோதித்துப்பார்.

72. அநேக சினேகிதர்களைப் பெற்றுள்ள ஓர் மனிதனைவிட, நண்பர்களே யில்லாத ஒருவனுக்கு நமது நட்பு அதிகதேவையானது என்று அறிந்துகொள்வது நமக்குச் சிலவேளைகளிற் கஷ்டமாயிருக்கும். அவனால் சினேகிதர்களை உண்டாக்கிக்கொள்ள முடியாவிட்டால், அக்காரணம் பற்றியே அவனுக்கு நாம்

சிநேகிதர்களை உண்டாக்கித்தரவேண்டியது முற்றிலும் நியாயமாகும்.

73. யார் மற்றவர்களால் தாங்கள் அதிக நன்ருய் நடத்தப்படவேண்டுமென்று நினைக்கிருர்களோ அவர்களே பொதுவாய் மற்றவர்களையும் சரியாய் நடத்தவேண்டி யுள்ளவர்களாயிருக்கிருர்கள்.

74. ஒரு பரிசுத்தமான பிரியத்தின் மிக வுண்மையானதோர் அறிகுறியானது, யாதொரு வித்தியாசமுமின்றி ஒரு சிநேகிதரிடமிருந்து ஓர் உதவிகேட்கச் சக்திபெற்றிருத்தலேயாம்.

75. கடவுள் எல்லாக்கைங்கரியங்களையும் பதிவுசெய்து கொள்ளுகிருர்; மனிதர்களோ, தாங்கள் அறிந்து ஒப்புக்கொள்ளக் கூடியவைகளை மாத்திரமே குறித்துக்கொள்கின்றனர்.

•76. அநேக ஜனங்களுடைய கைங்கரி யச் செயல்கள், வழக்கத்திலிருந்து உற்பத்தி யடைகின்றன.• இந்த ஸேவாமார்க்கத்திலுள்ள நம்முடைய கைங்கரியங்கள், அன்பினில் விளை ந்தவைகளாயிருத்தல் வேண்டும்.

77. தேவையின் கூப்பாடு உபத்திரவம், ஸேவையின் கூப்பாடு அன்பு.

78. இன்னொருவனுடைய பிழையை நீ திருத்தும்பொழுது அக்குற்றத்தை நீயே செய் ததாக பாவித்துக்கொண்டு செய்.

79. மற்றவர்களைப்பற்றி அவர்கள் முன் னிலையில் நீ பேச விரும்பமாட்டாயானதால், அவர்களுக்குப் புறம்பேயும் பேசாதே.

80. உன் உடனொத்த மற்ற மனிதர்களி டம் உன்னை அதிக சமீபமாய் இழுக்கத்தகுந்த

அறிவே நீ அடையத்தகுந்த சரியான அறிவாகும்.

81. நீ மற்றவர்களைவிட அதிகமாய் அன்புசெலுத்தி, அதனால் அதிகமாய்க் கைங்கரியம் செய்தாலொழிய, மற்றவர்களைவிட அதிக அறிவாளியாய் ஆகமாட்டாய்.

82. உண்மையில் அறிந்தவர்கள், தங்கள் அறிவைப்பற்றி கெர்வப்பட மாட்டார்கள்; ஏனென்றால் அவர்கள் எவ்வளவு அறியாதவர்களா யிருக்கிறார்களென்று அவர்களுக்குத்தெரியும்.

83. மற்றவர்களுக்கு மேலாக நீ அதிகாரப்பதவியில் வைக்கப்பட்டிருந்தால், உன்னுடைய பதவியானது, அவர்களுடைய முகஸ்துதியை உனக்கு அளிக்கும்; உன்னுடைய நற்

குணங்கள்தான் அவர்களுடைய அன்பை அடையச்செய்யும்.

**84.** நீ அன்னியர்களின் மத்தியிலிருக்கும் பொழுது, உன் கௌரவத்தைப்பற்றி நீயே நினைப்பதுபோல் அவர்களையும் எப்படி நினைக்கச்செய்யலாமென்று எண்ணுவதைவிட, அவர்களுடைய நல்லெண்ணத்தை நீ எப்படி சம்பாதிக்க வேண்டியவனா யிருக்கிறாயென்று எண்ணுவதுமேல்.

**85.** கடவுளுக்குப் பூஜைசெய்தல், அவரால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவகோடிகளுக்குத் தொண்டு புரிவதேயாம்.

**86.** நீ உன் குற்றங்களை ஒப்புக்கொள்ள முடியுமானால், ஜனங்கள் உன்னுடைய நற்குணங்களையும் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்வார்கள்.

87. நீ உன் செல்வாக்கைப்பற்றிப்பெருமையாய் நினைக்க ஆரம்பித்தால், அது எவ்வளவுதூரம் உன் பதவிகாரணமாய் ஏற்பட்டதென்றும், எவ்வளவுதூரம் உன் நற்குணம் காரணமாய் உண்டானதென்றும் நீ சோதித்துப்பார். ஒரு அதிகாரப்பதவியிலுள்ள ஒவ்வொரு மனிதனும் சில செல்வாக்கைப் பெற்றிருக்கிறான்.

88. உன் கடமையை நழுவவிட்டு (ஒழுங்குதவறி) ஜனங்களுக்கு உபகாரம் செய்யாமலிருக்க நீ மிகவும் ஜாக்கிரதையாயிரு.

89. உண்மையான பக்தியென்பது, நாம் யாரிடம் பக்திசெலுத்துகிறோமோ அவருக்கு ஸேவைபுரிவதேயொழிய, நம்காரியங்களுக்காக அவரைப்பிடித்துத் தொங்குவதன்று.

90. நீ செய்யும் வேலை உனக்குப் பொருந்திவரவில்லையென்று நீ புகார் செய்வதை விட. அதனுடன் உன்னையே பொருத்திக்கொண்டு ஆரம்பிப்பது அதிக நல்லது.

91. உண்மையான தியானத்தின் பிரயோஜனம், பிறர்க்குத் தொண்டுபுரியும் சக்தி நமக்கு அதிகரிப்பதும். நம் சொந்த அபிவிருத்தியிலேயே ஆழ்ந்திருப்பது குறைவதுமாம்.

92. ஜனங்கள் தங்கள் கைங்கரியங்களைப் பிறர் ஒப்புக்கொள்ளும் விதத்தைப்பார்த்து அதிருப்தியடைந்தால், அவர்கள் உண்மையான கைங்கரியத்தின் யதார்த்த நிலையின்னதென்று இன்னும் அறிந்துகொள்ளாதவர்கள்.

93. நீபுரியும் கைங்கரியச் செயல்கள் நீ வாக்களித்திருப்பதைவிட அதிகப்படும்படியாய்ப் பார்த்துக்கொள்ள நீ ஜாக்கிரதையாயிரு.

**94.** எந்தக் கைங்கரியத்தை நீ செய்வதால் நீ செய்யவேண்டியதாயிருக்கிற ஓர் கடமையை நிறைவேற்றவொட்டாமல் தடுக்கப்படுகிறாயோ அது உண்மையான கைங்கரியமன்று.

**95.** கஷ்டகாலங்களில் அறிவீனமாய்க் காரியஞ் செய்வதைவிட பிறரறியாமல் அநுதாபப் படுவது பொதுவாய் அதிகப் பிரயோஜனமுள்ளது.

**96.** செய்வதற்குக் கைங்கரியங்கள் ஒன்றும் அகப்படவில்லையென்று எண்ணுகிறவர்கள், மிருகங்களும் மரஞ் செடிகளும் இருப்பதை அடிக்கடி மறந்துவிடுகிறார்கள்.

**97.** பிறர்க்குக் கைங்கரியஞ்செய்யக் காலம் கிடைக்காத ஜனங்கள் அதைப் பிறரிடமிருந்து

பெறுவதற்கு எப்படியாவது ஏராளமான காலத்தை அடைகிறார்கள்.

**98.** நாம் கேள்விப்படாத ஒருவனைப் பற்றி நாம் ஒன்றும் தீர்மானிக்காமலிருப்பது, மிக அபூர்வமான கைங்கரியங்களில் ஒன்றாகும்.

**99.** நமது வியாதியானது, கைங்கரியச் செயல்கள் எப்படி சரீரப்பிரயாசையில் அடங்கியிருக்கின்றனவோ, அப்படியே நாம் கொள்ளும் மனோபாவத்திலும் அடங்கியிருக்கின்றனவென்று அறிந்துகொள்ள நமக்கு உதவி புரிகின்றது.

RM N26

18223

Printed at
SRI RAMACHANDRA PRESS,
PERALAM.

SB
8-66

புஸ்தகம் கிடைக்குமிடம்:—

சாந்திவிலாஸ புஸ்தகசாலை

எடமணல்,

(சீர்காழி வழி.)